பக்கங்கள் 15

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 18 செவ்வாய்க்கிழமை 05.12.2023 அதிர்வு 127

## சூரிய மின்னுற்பத்தி வீட்டுத் திட்டத்துக்கு விண்ணப்பிக்கலாம்

(ந.லோகதயாளன்)

வட மாகாணத்திற்கான, தலா 50 லட்சம் ரூபா பெறுமதியான 25 ஆயிரம் சூரிய மின்னுற்பத்தி இலவச வீட்டுத் திட்டத்துக்கு 04▸



# பிரபாகரனுக்கு நிகராக எவருமே வர முடியாது!

## துவாரகா வீடியோ போலியானது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருத்து





“தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு நிகராகத் தமிழர்கள் தரப்பில் இனி எவருமே வர முடியாது. அவரின் மகள் துவாரகா பேசுகின்றார் என்று கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி வெளியான வீடியோ போலியானது. இந்த வீடியோ புலம்பெயர் தமிழர்களின் ஒரு குழுவால் திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்த வீடியோவுக்கும் இலங்கைப் புலனாய்வுப் பிரிவினருக்கும் இடையில் எந்தவிதத் தொடர்பும் இல்லை.” 04▸



# மிக்ஜம் புயலால் சென்னையில் ஒரே நாளில் ஏழு பேர் உயிரிழப்பு

## 10 ஆயிரம் பேர் மீட்பு

(எம்.கே. ஷாகுல் ஹமீது)

சென்னையில் கொட்டித் தீர்த்த மழைக்கு 7 பேர் உயிரிழந்தனர். மழை நீர் தேங்கிய தாழ்வான பகுதிகள், வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் இருந்து 10 ஆயிரம் பேர் மீட்கப்பட்டு, பாதுகாப்பான இடங்கள், நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மிக்ஜம் புயல் காரணமாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் சென்னையில் பலத்த மழை பெய்து வருகின்றது. இந்த இடைவிடாத மிக கன மழை காரணமாக பொதுமக்கள் வீடுகளில் முடங்கியுள்ளனர். அதேவேளையில், மின்சாரம் பாய்ந்தும், கட்டடம், மரம் விழுந்தும் பொதுமக்கள் உயிரிழந்தனர்.

சென்னை அருகே உள்ள கானத்தூர் இந்திரா காந்தி தெருவில் ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த 04▸




## களனிப் பல்கலைக்கழகத்தின்

# பாதுகாப்பு உத்தியோகத்தரைக் கடத்தி தாக்கிய 4 மாணவர்கள் இடைநிறுத்தம்

**களனிப் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தரைக் கடத்தித் தாக்கிய சம்பவம் தொடர்பில் 4 பல்கலைக்கழக மாணவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.**

**மேலும் இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு இரண்டு குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன என்று பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.**

களனிப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய அனைத்து பீடங்களும் நேற்று முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன.

அந்தப் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர் தாக்கப்பட்டதை அடுத்து, இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்று பல்கலைக்கழக நிர்வாகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் நிறைவடையும் வரையில், மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய அனைத்து பீடங்களையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# மட்டு. தரவை மாவீரர் நினைவேந்தலில் கைதான நால்வருக்கும் மறியல் நீடிப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, தரவை மாவீரர் இல்லத்தில் நினைவேந்தலில் ஈடுபட்டமை தொடர்பில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 4 பேருக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. அவர்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வாழைச்சேனை நீதிவான் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி கிரான் பிரதேசத்திலுள்ள தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் இடத்தை அலங்கரித்த கொடிகள், கம்பங்கள், ஒலி பெருக்கி என்பவற்றைக் கழற்றி வாகனத்தில் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு திரும்பினர்.

இதன்போது சந்திவெளி பிரதேசத்தைச் சேர்ந்த மாவீரர் நினைவேந்தல் ஏற்பாட்டாளரும் முன்னாள் போராளியுமான நிதர்சன் என்றழைக்கப்படும் சின்னத்தம்பி காஞ்சிநிதி, ஒலிபெருக்கி உரிமையாளரான 43 வயதுடைய பிரான்சிஸ் அன்ரனி நியூட்டன், அவரது மகனான 19 வயதுடைய நியூட்டன் சதுர்சன், வாகன சாரதியான 33 வயதுடைய சண்முகநாதன் நவஜீவன் ஆகிய 4 பேரையும் தடைசெய்யப்பட்ட புலிகளின் பாடல் ஒலிபரப்பு செய்தமை, பெயர் பொறித்த பதாகை வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வாழைச்சேனை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 4 பேரையும் நவம்பர் 28 ஆம் திகதி வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது அவர்களை டிசம்பர் 4ஆம் திகதிவரை விளக்கமறியல் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இந்நிலையில், நேற்று திங்கட்கிழமை அவர்கள் நால்வரையும் மீளவும் வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.



# நன்னடத்தைப் பாடசாலை சிறுவன் கொலை: மேற்பார்வையாளருக்கு 14 நாள்கள் மறியல்!

(பாறுக் ஷிஹான்)

நன்னடத்தைப் பாடசாலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் கைதான அந்தப் பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட கல்முனை நீதிவான் நீதிமன்றம், அது தொடர்பான வழக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை மறு விசாரணைக்காக ஒத்திவைத்தது.

அம்பாறை மாவட்டம், கல்முனை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறுவர் நன்னடத்தைப் பாடசாலையில் தங்க வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண் சந்தேகத்தில் கல்முனை தலைமையகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் இன்று மீண்டும் கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோதே மேற்கண்டவாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு நீதிவானால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் மரணமடைந்த சிறுவனின் தந்தை ஆஜராகி இருந்தார். இதன்போது பொலிஸார் மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணிகளின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு 28 வயதுடைய குறித்த பாடசாலையின் மேற்பார்வையாளரான பிறின்ஸி புலேந்திரன் என்பவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இஸ்லாமபாத் பகுதியிலுள்ள பெண்கள் சிறுவர் நன்னடத்தைப் பாடசாலையில் கடந்த மாதம் 17ஆம் திகதி மணி ஒன்றைக் களவு செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மட்டக்களப்பு – கொக்குவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கொக்குவில் பகுதியைச் சேர்ந்த ஆனந்தீபன் தர்சாந் எனும் 15 வயது மதிக்கத்தக்க சிறுவன் நீதிமன்ற வழக்கு விசாரணையின் பின்னர் நீதிவானின் உத்தரவின் பிரகாரம் குறித்த காப்பகத்தில் பாதுகாப்புக்காக தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார். நன்னடத்தைப் பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணே அந்தச் சிறுவனை அடித்துப் படுகொலை செய்துள்ளார் என்று சிறுவன் தந்தை குற்றஞ்சாட்டியுள்ளார்.

# நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்

டுபாயில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் பங்கேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று இரவு நாடு திரும்பினார்.

இந்த மாநாட்டில், இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான கூட்டுத் திட்டமாக ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சர்வதேச காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகத்துக்கான திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்தார்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் காலநிலை மாற்றம் தொடர்பான விசேட பிரதிநிதி ஜோன் கெரிக்கும் இடையிலான சந்திப்பு இந்த மாநாட்டின் போது இடம்பெற்றது.

இதேவேளை, மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் நிறுவனர் பில் கேட்ஸ்/க்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மிக்ஜம் புயலால்...**

கட்டடத் தொழிலாளர்கள் ஆஸ்பெட்டாஸ் சீட் கூரை வீட்டில் தங்கியிருந்து கடந்த 5 ஆண்டுகளாக வேலை செய்து வந்தனர். இந்நிலையில், இந்த வீட்டின் அருகே மூன்றாவது தளத்தின் மொட்டை மாடியில் புதிதாக கட்டப்பட்டிருந்த ஒரு மதில் சுவர் நேற்று திங்கட்கிழமை காலை திடீரென இடிந்து விழுந்தது. இதில் கீழ் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த ஷேக் அப்ராகித் (வயது 45), முகம்மது தவ்பீக் (வயது 48),ஹாசிம் ஆகியோர் மீது சுவர் இடிந்து விழுந்தது. இதில் ஷேக் அப்ராகித், முகம்மது தவ்பீக் ஆகிய இருவரும் நிகழ்விடத்திலேயே இறந்தனர். பலத்த காயமடைந்த ஹாசிமை பொதுமக்கள் மீட்டு ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சென்னை பெசன்ட்நகர் பகுதியைச் சேர்ந்தவர் முருகன் (வயது 35). இவர் மழை பெய்யும்போது, அங்குள்ள மரம் முறிந்து விழுந்து பலத்த காயமடைந்தார். இதைப் பார்த்த அங்கிருந்தவர்கள், அவரை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முயன்றனர். ஆனால், பலத்தக் காயமடைந்த முருகன், சிறிது நேரத்தில் இறந்தார். திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தைச் சேர்ந்தவர் பத்மநாபன் (வயது 50). சென்னை பாரிமுனையில் உள்ள ஒரு பேக் தைக்கும் கடையில் ஊழியராக வேலை செய்து வந்த இவர், நேற்று திங்கட்கிழமை லோன் ஸ்கொயர் சாலையில் ஆவின் விற்பனையகம் அருகே சென்றபோது, அங்கு கீழே கிடந்த மின்சார வயரை மிதித்தார். இதில் அவர், மின்சாரம் பாய்ந்து சம்பவ இடத்திலேயே இறந்தார்.

இதேபோல துரைப்பாக்கம் பாண்டியன்நகர் பகுதியைச் சேர்ந்த கணேசன் (வயது 70) என்பவர், அங்குள்ள செல்வ விநாயகர் கோயில் தெருவில் நடந்து செல்லும்போது, மின்சாரம் பாய்ந்து இறந்தார். மேலும் வண்ணாரப்பேட்டை வைத்தியநாதன் மேம்பாலம் அருகே 70 வயது மதிக்கத்தக்க அடையாளம் தெரியாத ஒரு முதியவர் சடலத்தையும், பட்டினப்பாக்கம் மாநகர போக்குவரத்துக் கழக பணிமனை அருகே 60 வயது மதிக்கத்தக்க அடையாளம் தெரியாத ஒரு பெண் சடலத்தையும் மீட்டு பொலிஸார், பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சென்னையில் மழையால் நேரிட்ட நிகழ்வுகளில் சிக்கி ஒரே நாளில் 7 பேரும், ஏற்கனவே 3 பேரும் உயிரிழந்துள்ளனர்.

சென்னையில் அதிக மழை பெய்த பெருங்குடி, தரமணி, துரைப்பாக்கம், மேடவாக்கம், பள்ளிக்கரணை, கோவிலம்பாக்கம், சோழிங்கநல்லூர், வேளச்சேரி, செம்மஞ்சேரி, கண்ணகிநகர், பெரும்பாக்கம் பகுதிகளில் பாதிப்பும் அதிகமாக இருந்தது. இப் பகுதியில் ராஜீவ்காந்தி சாலை முழுவதுமாக மூழ்கியது.

இதேபோல் குடியிருப்புகளை முற்றிலும் வெள்ளம் சூழ்ந்தது. தாழ்வான பகுதிகளில் இருந்த குடியிருப்புகளுக்குள் தண்ணீர் புகுந்தது. இதன் விளைவாக அங்கிருந்த மக்களை, தீயணைப்புப் படையினர், பேரிடர் மீட்பு படையினரும் படகு மூலம் மீட்டு நிவாரண முகாம்களுக்கும், பாதுகாப்பான இடங்களுக்கும் அழைத்துச் சென்றனர்.

சென்னை சாலிகிராமம் தசரதபுரம் 4ஆவது தெருவில் குழந்தை பிறந்த சில மணி நேரத்திலேயே பெண் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டார். அவரை பொலீஸார் குழந்தையுடன் பாதுகாப்பாக மீட்டனர். கோயம்பேடு பகுதியில் ஒரு வீட்டில் சிக்கியிருந்த மூன்று பெண்களையும், ஒரு வயது குழந்தையையும் பொலிஸார் மீட்டனர். சாந்தோம் கணேசபுரம், ஸ்லேட்டர்புரம், சண்முகா தெருவில் 225 நபர்களும், மடிப்பாக்கம் அன்பு நகரில் 15 நபர்களும், முத்தியால்பேட்டை பி.ஆர். கார்டன் பகுதியிலிருந்து 54 குடும்பங்களும் மீட்கப்பட்டனர்.

இதேபோல் போரூர், ராமாபுரம், நந்தம்பாக்கம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் படகுகள் மூலம் மக்கள் மீட்கப்பட்டனர். மேலும் கடற்கரையோரத்தில் வசிக்கும் மக்களும், பாதுகாப்பு கருதி அரசு நிவாரண முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவ்வாறு நகர் முழுவதும் சுமார் 10 ஆயிரம் பேர் மீட்கப்பட்டனர் என்று அரசின் காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

---

**சூரிய மின்னுற்பத்தி...**

உரிய விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கை இறுதி கட்டத்தை அடைந்துள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய, வடக்கு மாகாணத்தில் ஆளுநரின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ள இந்த 25 ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கான விண்ணப்பங்கள் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலர்கள் ஊடாக ஏற்கப்பட்டு வருகின்றன.

இதுவரை இந்த வீட்டுத் திட்டத்துக்கு விண்ணப்பிக்காத எனினும், தகுதியுள்ள பயனாளிகள் இருப்பின் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் தங்களின் விண்ணப்பங்களை பிரதேச செயலர்கள் ஊடாக அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

வடக்கு மாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலுக்கு அமைய மாவட்ட செயலர்களின் வழிகாட்டுதல்களுடன், பிரதேச செயலர்களால் வீட்டுத்திட்ட பயனாளர்களை தெரிவு செய்யும் நடவடிக்கை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, யாழ்ப்பாணம், கிளிநொச்சி,முல்லைத்தீவு,வவுனியா,மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் இந்த வீட்டுத்திட்டத்துக்கு இதுவரை விண்ணப்பிக்காத, தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் இருப்பின், உடனடியாக தங்களின் பிரதேச செயலகத்தின் ஊடாக விண்ணப்பங்களை சமர்பிக்க முடியும்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் ஏற்கனவே வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டு, அது நிறைவு செய்யப்படாதவர்களும், மீள்குடியேற்றத்தின் பின்னர் காணி இல்லாமல் போனவர்களும், சொந்தக் காணி இருந்தும் இதுவரை வீட்டுத் திட்டம் கிடைக்காதவர்கள் மற்றும் வீட்டுத் திட்டத்தை பெற்றுக்கொள்வதற்கு வேறு ஏதேனும் வழியில் தகைமையுடையவர்களும் இந்த விசேட திட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்த புதிய வீட்டுத் திட்டத்தின் ஊடாக காணி அற்றவர்களுக்கு அரச காணியில் தொகுதி வீடமைப்பு திட்டமும் அமுல்படுத்தப்படவுள்ளது.

710 சதுர அடியில் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இந்த வீடுகளின் கூரைகளில் ஆயிரம் (1000) சதுர அடியில் சூரிய மின் படலங்கள் பொருத்தப்படவுள்ளன. மிகுதியாக எஞ்சும் பகுதிக்கு சீமெந்து தரை இடப்படும்.

வெளிநாட்டு தனியார் முதலீட்டு நிறுவனம் ஒன்றினூடாக செயற்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ், தலா 50 லட்சம் ரூபா பெறுமதியில் நிர்மாணிக்கப்படும் இந்த 25 ஆயிரம் வீடுகளின் கூரைகளில் பொருத்தப்படவுள்ள சூரிய மின்படலத்திலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தை இருபது (20) வருடங்களுக்கு மாத்திரம், வீட்டு உரிமையாளர்கள், குறித்த முதலீட்டு நிறுவனத்துக்கு வழங்கவேண்டும்.

எனினும் வீட்டு நிர்மாண பணிகளுக்கான கட்டணம் எதுவும் பயனாளிகளிடமிருந்து அறவிடப்படாது.

எனவே, இந்த திட்டத்துக்கு இதுவரை விண்ணப்பங்களை சமர்பிக்காதவர்கள் உடனடியாக பிரதேச செயலகங்கள் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்த விசேட வீட்டுத் திட்டம் தொடர்பாக மேலதிக தகவல்கள் மற்றும் முறைப்பாடுகள் காணப்படுமாயின், வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு 021 221 93 70 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக நேரடியாக அறிவிக்க முடியும்.

---

**பிரபாகரனுக்கு...**

- இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

கடந்த மாதம் மாவீரர் தினமன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் புதல்வி துவாரகாவின் உரை என வீடியோ ஒன்று வெளியாகிப் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அது தொடர்பில் கருத்துரைக்கும்போதே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு கூறினார்.

"அந்தப் போலி வீடியோவுக்கும் வெளிநாட்டு அரசுகளுக்கும் இடையில் தொடர்பு இருக்கும் என்று என்னால் கூற முடியாது. அதேவேளை, தொடர்பு இல்லை என்றும் என்னால் கூற முடியாது. ஆனால், இதன் பின்னணியில் புலம்பெயர் தமிழர்களின் ஒரு குழு திட்டமிட்டுச் செயற்பட்டுள்ளது என்பது நூறு வீதம் உண்மை" - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"2019ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப் போரில் பிரபாகரனும் அவரின் குடும்பத்தினரும் உயிரிழந்து விட்டனர். அவர்களை வைத்து இனி எவரும் அரசியல் செய்ய முடியாது. அது அவர்களை அவமானப்படுத்தும் செயல். பிரபாகரனின் கொள்கைகளில் எனக்கு உடன்பாடு இல்லை. ஆனால், அவர் நேர்மையான ஒரு தலைவர். இறுதி வரைப் போராடிய ஒரு தலைவர்" - என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன மேலும் தெரிவித்தார்.





# ஆரோக்கிய சமூகத்தை உருவாக்கல் விழிப்புணர்வு நிகழ்வு இறக்காமத்தில்

(எம்.எம்.றம்ஸீன்)

இறக்காமம் பிரதேச செயலகத்தின் பாரம்பரிய உணவுகள் மூலம் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குதல் என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்வு இறக்காமம் அமீர்–அலி புரம் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

சுகாதார அமைச்சின் சுதேச வைத்திய பிரிவின் கீழ் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.றிஜாஸின் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் குரக்கன் கஞ்சி தயாரித்தல் மற்றும் அதனால் கிடைக்கின்ற நன்மைகள் தொடர்பாக இறக்காமம் ஆயுள்வேத வைத்தியசாலை வைத்தியர் டாக்டர் கே. எல். எம். நக்பர் சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக இறக்காமம் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே. எல்.ஹம்சார், கௌரவ அதிதியாக இறக்காமம் அமீர் அலிபுரம் வித்தியாலய அதிபர் எஸ். எம். லாஹிர் ஆகியோருடன், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# வெளிநாடு பயணமாகும் வைத்தியர்களுக்குப் பாராட்டு

(சியாத்..எம்.இஸ்மாயில்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்களாக பணியாற்றிய டாக்டர். எம்.எஸ்.எம். நுஸைர் மற்றும் கதிரியக்கவியல் நிபுணர் டாக்டர் நிமேஷா ஆகியோர் பட்டப்பின் படிப்பின் பின்னரான வைத்தியத்துறையின் மேற்பயிற்சிக்காக வெளிநாடு பயணமாகினர்.

இவர்களைக் கௌரவித்து, பிரியாவிடை கொடுத்து வழியனுப்பும் நிகழ்வு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை நலன்புரி சங்கத்தின் தலைவர் டாக்டர். ஏ.ஜி.எம்.ஷுயீ தலைமையில் நடைபெற்றது.

வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ரீ.எஸ். ஆர்.ரீ.ஆர். றஜாப் இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இவர்களுக்கு ஞாபகச் சின்னங்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் பொது சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் டாக்டர் றிப்ஷான் ஜெமீல், நலன்புரிச் சங்க செயலாளர் ஏ.சீ. நகீப் மற்றும் நலன்புரிச் சங்க நிறைவேற்று குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# நிரந்தர திடீர் மரண விசாரணை அதிகாரி சம்மாந்துறைப் பிரதேசத்துக்கு நியமனம்

(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை பிரதேசத்துக்கு நிரந்தர திடீர் மரண விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

மருதமுனையை பிறப்பிடமாகவும், சாய்ந்தமருதை வசிப்பிடமாகவும் கொண்ட ஏ.எச்.அல் ஜவாஹிர் சம்மாந்துறை பிரதேசத்துக்கான நிரந்தர திடீர் மரண விசாரணை அதிகாரியாகநியமிக்கப்பட்டார்.

சம்மாந்துறை நீதிவான் றி.கருணாகரன் முன்னிலையில் நேற்று திங்கட்கிழமை(04) அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.



இவர் மரண விசாரணை டிப்ளோமா – கொழும்பு பல்கலைக்கழகம், ஆங்கில டிப்ளோமா கற்கை நெறி – இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம், மொழி பெயர்ப்பு டிப்ளோமா கற்கை நெறி– பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பூர்த்தி செய்துள்ளார்.

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) பழைய மாணவ ரான இவர் மர்ஹூம் எம்.எம்.அப்துல் ஹமீத் – ஏ.ஆர்.உம்மு சுறையா தம்பதிகளின் நான்காவது புதல்வராவார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பிளாஸ்டிக் குண்டு

இன்று சர்வதேச மண் நாள்.

மண்வளத்தை பேணுவது குறித்தும் அதன் மூலம் வளமான வாழ்வைப் பூமிப்பந்தில் மேம்படுத்துவது குறித்தும் சிந்திக்கும் - விழிப்புணர்வை ஏற்படுத்தும் - நாள் இது.

இந்த நாளில் மண்ணின் வளத்தை நாசமாக்கும் ஒரு பேராபத்து பற்றிய எச்சரிக்கை குறித்து ஆராய்வது பொருத்தமானதாகும்.

இலங்கையில் பிளாஸ்டிக் பொருள்களின் பாவனை கட்டுமீறி - எல்லை தாண்டி - இருப்பது பற்றிய எச்சரிக்கை, புள்ளிவிவர வடிவத்தில் வெளியாகி இருக்கின்றது.

இலங்கைக்கு என்றோ ஒருநாள் அதன் சூழலியலுக்கு அடியோடு பேரழிவை ஏற்படுத்தக்கூடிய மோசமான நிலையை நோக்கி பிளாஸ்டிக் உற்பத்தி, பாவனை, அது பற்றிய அசிரத்தை ஆகியவை நகர்த்திக் கொண்டிருக்கின்றன என்று அந்த புள்ளி விவரம் தெரிவிக்கின்றது.

சுற்றுச்சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான நாடாளுமன்றத் துறை மேற்பார்வைக் குழுவின் சமீபத்திய கூட்டத்தின் போதே, இலங்கையில் பிளாஸ்டிக் மறுசுழற்சியின் மோசமான நிலை குறித்து ஆபத்தான புள்ளிவிவரங்கள் வெளியாகியுள்ளன.

இங்கு நான்கு சதவீத பிளாஸ்டிக் பொருள்கள் மட்டுமே மறுசுழற்சி செய்யப்பட்டமை தெரியவந்தது. எஞ்சியவை அப்படியே மண்ணோடு சேர்ந்து பெரும் நாசப் பொருளாகக் கலக்க விடப்படுகின்றன.

இலங்கை நாளாந்தம் 938 மெட்ரிக் தொன் பிளாஸ்டிக்கை உற்பத்தி செய்கிறது. இதில் 32 சதவீதம் மட்டுமே மறுசுழற்சி செய்யப்படுகிறது.

எந்தவொரு ஒழுங்குமுறைக் கட்டமைப்பின்றி இரண்டாம் நிலை பிளாஸ்டிக்கை இறக்குமதி செய்ய தொழில்துறையினர் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் தெரியவந்தது.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக, துறைசார் மேற்பார்வைக் குழு, தொழில்துறையின் தேவைகளின் அடிப்படையில் உரிமங்களை ஒழுங்குபடுத்துமாறு மத்திய சுற்றுச்சூழல் ஆணையத்திற்கு இப்போது உத்தரவிட்டிருக்கின்றது.

இலங்கை வருடாந்தம் நான்கு லட்சம் தொன் பிளாஸ்டிக் மூலப்பொருள்களையும் இருபதாயிரம் தொன் கழிவு பிளாஸ்டிக்கையும் இறக்குமதி செய்வதாகவும் அதிகாரிகள் வெளிப்படுத்தினர். கடந்த ஆண்டு இருபதாயிரம் தொன் கழிவு பிளாஸ்டிக் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தாலும், சுமார் 5,179 தொன்னே இறக்குமதி செய்யப்பட்டது.

பிளாஸ்டிக் பொருள்களின் இறக்குமதி அனுமதிகளை தொழில்துறை தேவைகளுடன் சீரமைக்கவும், பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் முறையாக சேகரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கான வழிமுறையை அமைக்கவும் மேற்படி நாடாளுமன்றத் தெரிவுக் குழு பரிந்துரைத்தது.

பயன்பாட்டிற்குப் பிறகும் பிளாஸ்டிக் கழிவுகள் சேகரிக்கப்படாமல் விடப்படுகின்றமை நாட்டின் வளத்துக்கு ஆபத்தை ஏற்படுத்துவதாக உள்ளது என்று நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவுக்குச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

பிளாஸ்டிக் சேகரிப்பில் அதிக செலவுகள் ஏற்படுவதால், அதில் அரசின் ஈடுபாட்டையும் பங்கேற்பையும் அதிகரிக்கச் செய்யவும் பிளாஸ்டிக் சேகரிப்பை ஊக்குவிக்கவும் நாடாளுமன்ற மேற்பார்வைக் குழு முன்மொழிந்தது.

நாடு முழுவதும் பிரத்தியேக பிளாஸ்டிக் சேகரிப்பு மையங்களை அமைக்க வேண்டிய அவசரத் தேவையை அக்குழு வலியுறுத்தியுள்ளது.

இவை எல்லாவற்றையும் தாண்டி இந்த நாச அழிவிலிருந்து இலங்கைத் தீவை மீட்பதற்கு உருப்படியான திட்டங்களோ, காத்திரமான நடவடிக்கைகளோ களத்தில் இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.





# மறைந்த ஊடகவியலாளர் நிபோஜனின் குடும்பத்துக்கு வாழ்வாதார உதவிகள்

(சண்முகம் தவசீலன்)

மறைந்த ஊடகவியலாளர் நிபோஜனின் குடும்பத்துக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

பெண் தலைமை தாங்கும் குடும்பமான மறைந்த ஊடகவியலாளர் நிபோஜனின் குடும்பத்துக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் உதவி வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மறைந்த ஊடகவியலாளர் நிபோஜனின் குடும்பத்தினருக்கு கனடா செந்தில் குமரனின் நிவாரண அமைப்பின் ஏற்பாட்டில் இந்த உதவி வழங்கப்பட்டது.

மூன்று லட்சம் ரூபா பெறுமதியான தையல் பொருள்கள் திருகோணமலையில் அவரது மனைவி இல்லத்தில் வைத்து நேற்று (04) வழங்கப்பட்டுள்ளன.

தற்கால பொருளாதார நெருக்கடி காலத்தில் தலைமை தாங்கும் குடும்பங்கள் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடாத்த பெரிதும் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அண்மையில் ரயில் விபத்தில் சிக்கி மறைந்த இளம் ஊடகவியலாளர் குடும்பத்தின் தேவையறிந்து தக்க சமயத்தில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

# அட்டாளைச்சேனை கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபையில் அறூஸ் இணைவு

(அபு அலா)

அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராக தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநரின் விஷேட அறிவுறுத்தலுக்கமைவாக, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான என்.மதிவண்ணனால் இவருக்கான நியமனக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுத்துறையின் அபிவிருத்திக்காக பல்வேறு பணிகளை நீண்ட காலமாக மேற்கொண்டுவரும் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ் மட்டுப்படுத்தப்பட்ட அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராக



நியமிக்கப்படடுள்ளார்.

இந்த இடைக்கால புதிய பணிப்பாளர் சபைக்கு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான பீ.ரீ.ஆதம்பாவா மற்றும் ஐ.எம்.நியாஸ் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



# அம்பாறையில் கடல் கொந்தளிப்பால் காவு கொள்ளப்படும் கரையோரங்கள்!

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தின் கடல் பரப்பில் ஏற்படும் கடல் கொந்தளிப்பால் பாரிய அலைகள் கரையை நோக்கி வருவதால் கடற்கரைப் பிரதேசம் காவு கொள்ளப்படுகிறது. இதனால் மீனவர்களும் பிரதேச குடியிருப்பாளர்களும் சொல்லொனா துயரங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

கடற்கரைப் பிரதேசத்தில் உள்ள பயன்தரும் தென்னைமரங்கள் கடலரிப்பால் தரையில் வீழ்ந்து காணப்படுகின்றன. ஏனைய மரங்களின் வேர்களும் தரைக்கு மேலாக வெளிவந்துள்ளன.

இதனால் தென்னம் தோட்டங்களை பராமரித்து வருவோர் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர். மீனவர்கள் தாம் ஓய்வு எடுப்பதற்கும், தமது தோணி, படகு , மீன்பிடி வலை என்பவற்றை திருத்துவதற்காகப் பயன்படுத்தும் இயற்கையான நிழலும் இல்லாமல் போகிறது என்று கவலை தெரிவித்தனர்.

கடற்கரை பிரதேச மீனவர்கள் தமது தோணி மற்றும் படகுகளையும் நிறுத்திவைப்பதற்கு தற்போது போதிய இடவசதியும், தமது மீன்பிடி உபகரணங்களை பாதுகாத்து வைப்பதற்கான மீன்வாடிகளும் இல்லாமலிருப்பது தமக்கு பெரும் கவலையளிக்கிறது என்று தெரிவிக்கின்றனர்.

இந்த நிலமை ஏற்படுவதற்கு ஒலுவிலில் அமைக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகமும் ஒரு காரணமாகும் என்று பிரதேச மீனவர்கள் தெரிவித்தனர்.

தற்போது கடலரிப்பை தடுப்பதற்கான தடுப்புக் கல் இடும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



# கல்முனை மாநகர உத்தியோகத்தரது பிள்ளைகளுக்குப் பாராட்டு நிகழ்வு!

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் நிதிப் பிரிவில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களான ஏ.எம்.எம். றியாஜத் மற்றும் எம்.எஸ்.நஜீம் ஆகியோரின் பிள்ளைகள் இம்முறை தரம்–5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்தமைக்காக அவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (04) நடைபெற்றது.

கல்முனை மாநகர சபை நிதிப் பிரிவின் ஏற்பாட்டில் கணக்காளர் கே.எம்.றியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி பிரதம அதிதியாக கலந்து கொண்டார். உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச். ஜௌஸி ஆகியோரும் அதிதிகளாக பங்கேற்றனர்.

இதன்போது முஹம்மட் றியாஜத் அறைஸ் அம்ஹர் மற்றும் நஜீம் முஹம்மட் நுபையில் நகீ ஆகியோர் நினைவுச் சின்னம், பரிசுப் பொதி மற்றும் பணப் பரிசு என்பன வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.



# சாதாரண தர மாணவர் கௌரவிப்பு

(எம்.எம்.றம்ஸீன்)

கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கும் கல்முனை கல்வி வலயத்துக்கும் பெருமை சேர்த்து சாதனை புரிந்த மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் வாழ்த்தி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எம்.ஐ. அப்துல் ரஸாக் தலைமையில் பிரதி அதிபர் எம்.ஆர்.எம். நௌஸாட் நெறிப்படுத்தலில், தரம் –11 பகுதித் தலைவர் ஸி. இஸாம் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பாடசாலை பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# சர்வதேச மனித உரிமைகள் வாரம் வெருகல் பிரதேசத்தில் அனுஷ்டிப்பு

(ஹஸ்பர், கீதபொன்கலன்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு அகம் மனிதாபிமான வள நிலையத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை, வெருகல் பிரதேச சிவில் அமைப்புகளால் நேற்று (04) திங்கட்கிழமை வட்டவன் பகுதியில் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் மனித உரிமைகள் தின வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.




இதன்போது வெருகல் பகுதியில் மீறப்பட்டு வரும் மனித உரிமைகள் தொடர்பாக மக்கள் கருத்து தெரிவித்திருந்தனர்.

தமது பிரதேசத்தின் மணல் வளம் சுரண்டப்படுகின்றமை, காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளமை, பொலிஸ் நிலையத்தில் தமிழ் மொழியில் முறைப் பாடுகளை பெறுவதற்கு மறுப்பு தெரி விக்கப்படுகின்றமை உட்பட பல மனித உரிமை மீறல் தொடர்பான விடயங்களைத் தெரிவித்தனர். அது தொடர்பான மகஜர் ஒன்றை மனித உரிமைகள் தினத்தன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கையளிக்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு சிவில் செயற்பாட்டாளர்களினால் டிசெம்பர் 04ஆம் திகதி முதல் 12ஆம் திகதிவரை மனித உரிமைகள் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# புறப்பாடவிதான செயற்பாடுகளில் வெற்றி பெற்றோர் கௌரவிப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் தேசிய பாடசாலையில் பாடவிதான மற்றும் புறப் பாடவிதான செயற்பாடுகளில் இவ்வருடம் தமது திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்கள், சக மாணவர்கள் ஆசிரியர்கள் முன்னிலையில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் றிப்கா அன்ஸார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஐந்தாம் ஆண்டு புலமை மாணவர்கள், க.பொ.த.சாதாரணதர பரீட்சை அதி திறமை மாணவர்கள் , தமிழ் மொழித்தின மற்றும் ஆங்கிலதினப் போட்டிகள், சமூக விஞ்ஞானப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் , பல்கலை கழகத்துக்குத் தெரிவான மாணவர்கள், மாணவர் நாடாளுமன்ற பிரதம மந்திரி மற்றும்



உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் கௌரவம் பெற்றனர்.

இந் நிகழ்வில் சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.அப்துல் மலீக், மற்றும் கல்முனை கல்வி வலயத்தின் தமிழ்ப்பாட வளவாளர் ஜெஸ்மி எம் மூஸா ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.

அவர்களுடன் இணைந்து ஒரு வார சேவை முன் பயிற்சிக்காக நியமிக்கப்பட்ட புதிய அதிபர்களான எம்.பி.எம்.பௌஸான், எம்.ஜே.எம்.றினீஸ், ஏ.பி.நஸ்றின் ஜலீல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஆசிரியர் ஸிஹ்னாஸ் பர்வினால் நூலகத்துக்குப் புத்தகங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.



# இருவருக்குப் பாராட்டு நிகழ்வு!

(அபு அலா)

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தில் கடந்த 9 வருடங்கள் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற திருமதி சிவவதனா நவேந்திரராஜா மற்றும் 7 வருடங்கள் கடமையாற்றி பதவியுயர்வு பெற்றுச்சென்ற திருமதி வை.கார்த்திகா ஆகியோரின் சேவைகளைப் பாராட்டிய நிகழ்வு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தில் இடம்பெற்றது. கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் இணைந்து கொண்டு, அவர்களின் அர்ப்பணிப்புடனான சேவைகளைப் பாராட்டிய பரிசுகளையும் வழங்கிக் கௌரவித்தனர்.






# ஏறாவூர் ஐயங்கேணியில் வாசிப்பு மாத நிகழ்வுகள்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு ஏறாவூர் ஐயங்கேணி பஷீர் சேகுதாவூத் பொது நூலகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட தேசிய வாசிப்பு மாத இறுதி நிகழ்வானது நூலகப் பொறுப்பாளர் வே. நளீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதிகளாக ஏறாவூர் பற்று பிரதேச சபையின் செயலாளர் வீ.பற்குணன் மற்றும் ஏறாவூர் நகர சபையின் செயலாளர் எம்.எச்.எம். ஹமீம் ஆகியோரும் கௌரவ அதிதிகளாக ஏறாவூர் பற்று பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.எம். ஜஃபர், சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வினோதினி சிவமலர், நூலக நெறிப்படுத்தல் உத்தியோஸ்தர்களான, சந்திரகுமார் நழிந்திரன் , முகைதீன் , பஹார் இவர்களோடு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக சேவையாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# காட்டு யானைகளின் தொல்லையால் இறக்காமம் கரும்பு செய்கை பாதிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் கரும்பு செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் காட்டு யானைகளின் தொல்லையால் பாரிய நஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இறக்காமம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இறக்காமம், குடுவில், மாணிக்கமடு மற்றும் தண்ணிமலை ஆகிய கிராமங்களுக்குள் இரவு வேளைகளில் உட்புகும் காட்டு யானைகள் குடியிருப்புகளுக்கும் உடமைகளுக்கும் கரும்பு பயிர்களுக்கும் பலத்த சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன.

காட்டு யானைகள் கூட்டமாக வந்து கல்மடுப் பகுதியிலுள்ள கரும்புத் தோட்டத்துக்குள்ளும் நுழைந்து சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

தற்போது அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலும் பெரும் போக வேளாண்மைச் செய்கை நிறைவடைந்த நிலையில் விவசாயிகள் காட்டு யானைகளின் நடமாட்டத்தை இரவு பகலாக மிகுந்த கவனத்துடன் அவதானித்தும் வருகின்றனர்.




# சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு!

கடந்த 2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தின் பின் அதிகூடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த மாதம் பதிவாகியுள்ளது.

சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபை இந்த தகவலை வெளியிட்டுள்ளது.இந்த தகவலின் படி கடந்த நவம்பர் மாதத்தில் 151,496 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

கடந்த பதினொரு மாதங்களில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை சுமார் பதின்மூன்று லட்சம் என தெரிவிக்கப்படுகின்றது.



# குடியேறுமாறு நீதிமன்றம் தீர்ப்பளிப்பு; வெளியேறுமாறு பொலிஸார் அச்சுறுத்தல்!

## பாதிக்கப்பட்ட மக்கள் விசனம்!!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சந்திவெளி பகுதியில் குடியேறி வெளியேற்றப்பட்ட 380 குடும்பங்களையும் மீண்டும் அங்கு குடியேறுமாறு நீதிமன்றம் தீர்ப்பளித்த போதும் அந்த சட்டவிரோதமாக காணியை கையடக்கியவர் பொலிஸாருடன் இணைந்து அச்சுறுத்தி வருகிறார் என்றும் நீதிமன்ற தீர்ப்பை மீறி பொலிஸார் அராஜகம் இடம்பெற்று வருகிறது என்றும் பாதிக்கப்பட்ட மக்கள் கடும் விசனம் தெரிவித்தனர்.

இந்தப் காணிப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடக மாநாட்டில் பாதிக்கப்பட்ட மக்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

சந்திவெளி பொலிஸ் பிரிவிலுள்ள பாலையடி தோனா ஜீவநகர் பகுதியில் கடந்த 3 வருடங்களுக்கு மேலாக காணி இல்லாத 380 குடும்பங்களைச் சேர்ந்த வறிய மக்கள் அந்த பகுதியிலுள்ள காணியின் பற்றைக்காட்டை வெட்டி துப்பரவு செய்து குடில் அமைத்து அதில் தங்கி பயிர் செய்கையில் ஈடுபட்டுவந்தோம்.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அந்தப் பகுதியைச் சேர்ந்த காதர் என்றழைக்கப்படும் காணி மாபியாவைச் சேர்தவர் அது தனது காணி என போலி ஆவணத்தை



தயாரித்து அங்கு குடியேறியவர்களைச் சந்திவெளி பொலிஸாருடன் இணைந்து வெளியேற்றினார்.

குடிசைகளைத் தீவைத்து வேலிகளைப் பிடிங்கி வெளியேற்றியதுடன் சிலரை பொலிஸ் அதிகாரத்தால் கஞ்சாவை வைத்து மற்றும் குற்றச்சாட்டில் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தி விளக்கமறியல் வைத்து அச்சுறுத்தினர்.

இதனையடுத்து பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவிடம் சந்திவெளி பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு செய்தோம்.

இதேவேளை இந்தக் காணி தனது எனவும் அங்கு குடியேறியவர்களை வெளியேற்றுமாறு காணி மாபியா காதர் பொலிஸாரிடம் கோரிய நிலையில் குறித்த பிரச்சனை தொடர்பாக பொலிஸார் குறியேறியவர்களுக் எதிராக ஏறாவூர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கின் மக்களாகிய எங்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி பிறேம்நாத் ஆஜராகிய நிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்த போது இந்த காணியை உரிமை கோருபவருக்கு சொந்தமானது அல்ல எனவும் வெளியேறியவர்களை மீள குடியேறுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது தீர்ப்பளித்தது.

நீதிமன்ற தீர்ப்பின் பின்னரும் பொலிஸார் குறித்த காணியில் மீண்டும் துப்பரவு பணிகளில் ஈடுபட்டவர்களை கைது செய்வது அச்சுறுத்துவது போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டனர். தொடர்ச்சியாகப் பொலிஸார் காணி மாபியாவுடன் சேர்ந்து மீண்டும் குடிசைகளை பக்கோ வாகனத்தால் உடைத்து தள்ளி அராஜகம் செய்தனர்.

இது தொடர்பாக ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் நேற்று திங்கட்கிழமை (4) சிரேஷ்ட சட்டத்தரணி பிறேம்நாத் முன்நகர்வு விண்ணப்ப பத்திரம் தாக்கல் செய்தார்.

இதனை அடுத்து வழக்கு விசாரணைக்கு எடுத்த நீதிவான் பொலிஸாரின் இந்த செயற்பாட்டை கண்டித்தார். அந்தக் காணிப் பகுதிக்குப் பொலிஸார் செல்ல கூடாது எனவும் அதில் வெளியேற்றப்பட்ட மக்கள் குடியேறுமாறு நான்காவது தடவையாக தீர்ப்பளித்தார்.

இருந்தபோதும் நீதிமன்ற தீர்ப்பை மீறி மீண்டும் சந்திவெளி பொலிஸார் காணி மாபியாவுடன் இணைந்து அராஜகம் செய்வார்கள் என அச்சமடைந்துள்ளோம் என்று தெரிவித்தனர்.

# மன்னார், நறுவிலிக் குள மைதானம் 2024 ஜூலையில் மக்கள் பாவனைக்கு

## விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் றோகண திசாநாயக்க தகவல்

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட பொது விளையாட்டு மைதானத்தின் வேலைகள் அனைத்தும் எதிர்வரும் ஜூலை மாதம் பூர்த்தி செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படும் என்று விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் றோகண திசாநாயக்க நேற்று (4) நாடாளுமன்றத்தில் உறுதியளித்தார்.

அத்துடன் அடுத்த ஆண்டு மைதானத்தின் வேலைகள் பூர்த்தி செய்ய 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் கூறியிருந்தார்.

மன்னார், நறுவிலிக் குளத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மாவட்ட



பொது விளையாட்டு மைதானத்தின் நிர்மாணப்பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் இந்த வருடம் மக்கள் பாவனைக்கு விடப்படும் என உறுதி அளித்த போதும் இன்னமும் வேலைத் திட்டம் பூர்த்தி செய்யப்படவில்லை எனவும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதன்போது விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

நீச்சல் தடாகம், மெய்வல்லுநர் மைதானம் மற்றும் பாதுகாப்பு அறை என்பனவே முடிவுறுத்தப்பட வேண்டியுள்ளது. இவ்வேலைகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு ஜூலை மாதம் அனைத்து நிர்மாணப் பணிகளும் முடிவுறுத்தப்படும். மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படும்.– என்றும் அமைச்சர் உறுதியளித்திருந்தார்.

# நாட்டில் வறுமையை ஒழிப்பதற்கு பெண்களின் பங்கு மிக முக்கியம்

## எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு

நாட்டில் வறுமையை ஒழிப்பதற்கும், வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கும் பெண்களின் பங்கு முதன்மையாக இருக்க வேண்டும். பொருளாதார அபிவிருத்தியில் பெண்கள் முன்னோடியாக மாற வேண்டும். மகளிர் உரிமைகளுக்கு எதிரான சட்டங்கள் நீக்கப்பட வேண்டும்.

தொழிலாளர் சந்தையில் பெண்களின் பங்களிப்பு விகிதம் 45 சதவீதமாக இருக்க வேண்டும். இது 32-35 சதவீதமாக உள்ளது. வங்குரோத்தான நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டுவரும் போது தொழிலாளர் சந்தையில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கப்பட வேண்டும்.

பெண்கள் வீட்டிலும், வீதியிலும், வேலை செய்யும் இடங்களிலும் துன்புறுத்தலுக்கு ஆளாக நேரிடுகிறது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பெண்கள் மற்றும் சிறுவர்கள், உரிமைகள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்த போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் வறுமையை ஒழிப்பதற்கும், வங்குரோத்து நிலையிலிருந்து மீள்வதற்கும் பெண்களின் பங்கு முதன்மையாக இருக்க வேண்டும். பொரு



ளாதார அபிவிருத்தியில் பெண்கள் முன்னோடியாக மாற வேண்டும். மகளிர் உரிமைகளுக்கு எதிரான சட்டங்கள் நீக்கப்பட வேண்டும். தேர்தல் காலத்தில் பெண்களுக்கான ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும் என பேசப்பட்டாலும், இன்னும் பெண்களுக்கான ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படவில்லை. இதற்கென தனியான ஜனாதிபதி செயலணி நிறுவப்படும் என்று பேசப்பட்டாலும் அவ்வாறான விடயம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பது தெரியாதுள்ளது.

பெண்களின் உரிமைகள் மற்றும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க சர்வதேச மற்றும் தேசிய இணைக்கப்பாடுகள் இருந்தாலும், அவைகள் நடக்கின்றனவா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பிள்ளைகள் நீதிமன்றத்திற்குச் சென்ற பிறகு, அவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட தரப்பினருடன் ஒன்றாக உட்கார வேண்டியுள்ளது. செயல்பட வேண்டியுள்ளது. இந்த முறைமையை மாற்றி, துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பிள்ளைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய நீதித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டின் வங்குரோத்து நிலையால் பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளன. வாழ்வாதாரம், பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் மீறப்பட்டுள்ளன. தேர்தலின் போது இது குறித்து பேசினாலும், இது உண்மையில் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதைக் கொண்டு சிக்கலாக நிலை காணப்படுகிறது. தாய் சேய் ஊட்டச்சத்தில் கவனம் செலுத்தும் தேசிய போசணைக் கொள்கை நாட்டுக்கு அவசியம்.

கொவிட் மற்றும் வங்குரோத்து நிலைக்குப் பிறகு, தாய் சேய் ஊட்டச்சத்து குறைபாடு குறித்து சரியான கணிப்பீடு நடத்தப்படவில்லை. பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் ஊட்டச்சத்து குறைபாடுகள் குறித்துக் கணிப்பீடு நடத்தப்படவில்லை. இந்தத் தரப்பினர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.-என்றார்.

## மலேசியாவில் நடைபெற்ற மனக்கணித போட்டியில்

# கற்பிட்டியைச் சேர்ந்த மாணவர்கள் நால்வருக்கும் மூன்றாம் இடங்கள்!



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி ஸ்ரேபோட் சர்வதேச ஆங்கிலக் கல்லூரியில் நடைபெற்று வரும் யூசிமாஸ் சென்றில் கல்வி பயிலும் 04 மாணவர்கள் சர்வதேச மனக்கணித போட்டிக்கு தெரிவாகி மலேசியா பயணமானார்கள்.

மலேசியா கோலாலம்பூரில் ஞாயிறு நடைபெற்ற சர்வதேச மனக்கணித போட்டிக்கு 80 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் கற்பிட்டியைச் சேர்ந்த ஜேசுதாசன் தபேரேரா மரிய சந்துனி, சகாய நிரோஷன் யேன் றொசல்டா, சகாய நிரோஷன் யேன் றச்சிலி , சரீப் சறுன் மொஹமட் முஸாரீப் ஆகிய நான்கு மாணவர்கள் கற்பிட்டி ஸ்ரேபோட் சர்வதேச ஆங்கிலக் கல்லூரியில் இயங்கும் யூசிமாஸ் சென்டர் ஊடாக இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் 60 மாணவர்களில் உள்ளடக்கப்பட்டனர்.

கற்பிட்டி சார்பாக கலந்து கொண்ட நான்கு மாணவர்களும் மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டனர்.



## அடிப்படை வசதிகள் இன்றி இயங்கிவரும்

# கொக்கிளாய் அ. த. க. பாடசாலை சாதாரண தரத்தில் நூறு வீத சித்தி!

**(சண்முகம் தவசீலன்)**

உரிய அடிப்படை வசதிகள் இன்றி விசேட வகுப்புகள் இன்றி எல்லைக் கிராமத்தில் உள்ள கொக்கிளாய் பாடசாலை 100 வீத சித்தி பெற்று சாதனை படைத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல் லைக் கிராமங்களில் ஒன்றான கொக்கிளாய் கிராமத்தில் இயங்கிவரும் கொக்கிளாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளில் 100 வீத சித்தியடைந்து சாதனை படைத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல் லைக் கிராமமாக காணப்படும் கொக் கிளாய் பகுதியில் உரிய அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வரும் பாடசாலையே கொக்கிளாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை யாகும்.

இந்தப் பாடசாலையில் இருந்து பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் நான்கு மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்த நிலையில் நால்வரும் சித்தியடைந்து உயர்தரம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர்.





# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆறுமுக நாவலர் குருபூசை நிகழ்வு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இந்து மன்ற ஏற்பாட்டில் ஆறுமுக நாவலர் குருபூசை தின விழா நேற்று (04) திங்கட்கிழமை கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் தொடக்கத்தில் கலாசாலை வாயிலில் அமைந்துள்ள ஆறுமுக நாவலர் திருவுருவச் சிலைக்கு கலா சாலை அதிபர் ச. லலீசனும் இந்து மாமன்ற காப்பாளரும் விரிவுரையாளரு மாகிய கு. பாலசண்முகனும் மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தி னர்.

அதனைத் தொடர்ந்து கலாசாலை



விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரிய மாணவர்கள் மலர் வணக்கம் செலுத் தினர்.

கலாசாலை ஆசிரிய மாணவர்கள் சமய வேறுபாடின்றி ஆறுமுக நாவலர் குறித்து தாங்கள் அறிந்ததை சபையின் முன் குறுகிய நேர உரையாக சமர்ப் பித்தனர்.

நிகழ்வின் கருத்துரை களைப் பிரதி அதிபர் த.கோபாலகிருஷ்ணன் மற் றும் தமிழ்த்துறை விரிவுரை யாளர் வேல் நந்தகுமார் ஆகியோர் ஆற்றினர்.

இந்து மன்ற காப்பாளர் கு. பாலஷண்முகன் நிறை வுரை ஆற்றினார். நிகழ்ச் சியை மாணவர் மன்ற தலைவர் சு. தனசீலன் நெறிப்படுத்தினார்.

நிகழ்வில் வரவேற்புரையை க.பிரசாந் தனும் நன்றியுரையை ச.கஜராஜும் நிகழ்த்தினர்.



# தமிழகத்தில் ஓய்ந்தது ‘மிக்ஜம்’ புயல் சென்னை விமான நிலையம் திறப்பு!

‘மிக்ஜம்’ புயல் எதிரொலியாக சென்னையில் நேற்று முன்தினம் இரவு முதலே சூறைக்காற்றுடன் கனமழை வெளுத்து வாங்கியது. இதனால், நகரின் பல்வேறு பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ளது. தாழ்வான பகுதிகளில் தேங்கிய மழைநீரால், அப்பகுதி முழுவதும் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது.

இதனிடையே தொடர் கனமழை காரணமாக சென்னை விமான நிலையத்தில் உள்நாடு மற்றும் சர்வதேச விமான சேவைகள் பாதிக்கப்பட்டன. அபுதாபி, துபாய், கொழும்பு, டெல்லி ஆகிய நகரங்களில் இருந்து சென்னை வந்த 8 விமானங்கள், மழை மற்றும் காற்றால் தரையிறங்க முடியாமல் வானில் வட்டமடித்தன. பின்னர் அந்த விமானங்கள் அனைத்தும் பெங்களூருவுக்கு திருப்பிவிடப்பட்டன.

அதேபோல, நேற்று சென்னையில் இருந்து துபாய், கொச்சி, விஜயவாடா உள்ளிட்ட நகரங்களுக்கு செல்லக்கூடிய 10 விமானங்கள் மற்றும் அந்த நகரங்களில் இருந்து சென்னைக்கு வர வேண்டிய 10 விமானங்கள் என மொத்தம் 20 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

இதற்கிடையே மிக்ஜம் புயல் எதிரொலியாக விமான நிலைய ஓடுதளத்தில் 2 அடி உயரத்திற்கு மழைநீர் தேங்கியதால் விமான சேவையில் சிக்கல் ஏற்பட்டது. இதன் காரணமாக சென்னை விமான நிலையம் 2 மணி நேரம் மூடப்படுவதாக முதலில் அறிவிக்கப்பட்டு, பின்னர் விமான சேவை இன்று காலை வரை ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது மிக்ஜம் புயல் ஆந்திர பகுதிக்குள் நுழைந்ததால் சென்னையில் மழை அளவு சற்று குறைத்துள்ளது. சென்னையில் பிரதான சாலைகளில் தேங்கி இருந்த வெள்ள நீரும் வடிய தொடங்கி உள்ளது. இதனைத் தொடர்ந்து இன்று காலை 9 மணி முதல் சென்னை விமான நிலையம் திறக்கப்பட்டு விமான சேவைகள் தொடங்கப்பட்டு உள்ளன.

ஆனால் இயல்புநிலை திரும்பாததால் வழக்கம் போல விமான சேவைகள் இயக்கப்படாது எனவும், மிகவும் குறைவான அளவிலேயே விமானங்கள் இயக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னைக்கு வரவேண்டிய 88 விமானங்களும் சென்னையில் இருந்து புறப்பட வேண்டிய 87 விமானங்களும் முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. ரத்து செய்யப்பட்ட விமானங்கள் குறித்த தகவல்கள் சென்னை விமான நிலைய இணையதளத்தில் வெளியிடப்படும் என விமான நிலைய அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சசிகலா நீக்கம் சரியானது!

## மேன்முறையீட்டை நிராகரித்து சென்னை உயர் நீதிமன்றம்

ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அ.தி.மு.க. பொதுச்செயலாளராக சசிகலாவும், துணை பொதுச்செயலாளராக டி.டி.வி.தினகரனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதற்காக அ.தி.மு.க. பொதுக்குழுவில் தீர்மானங்கள் இயற்றப்பட்டன. அதன்பிறகு அ.தி.மு.க. பொதுக்குழு கூடி சசிகலா, தினகரன் ஆகியோரை அப்பதவிகளில் இருந்தும், கட்சியில் இருந்தும் நீக்கியது. அதற்கு பதில் ஒருங்கிணைப்பாளராக ஓ. பன்னீர்செல்வமும், இணை ஒருங்கிணைப்பாளராக எடப்பாடி பழனிசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



இந்தநிலையில் பொதுச்செயலாளர் பதவியில் இருந்தும், கட்சியில் இருந்தும் தன்னை நீக்கியது செல்லாது என அறிவிக்கக்கோரி சசிகலா, சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை நிராகரிக்கக்கோரி ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி ஆகியோர் மனு தாக்கல் செய்தனர். மனுவை ஏற்றுக்கொண்ட உரிமையியல் நீதிமன்றம், சசிகலாவின் வழக்கை நிராகரித்து உத்தரவிட்டது.

இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் சசிகலா மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், என்.செந்தில்குமார் ஆகியோர் கொண்ட டிவிசன் பெஞ்சில் விசாரிக்கப்பட்டது. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதிகள், இந்த வழக்கின் தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் தள்ளிவைத்து கடந்த மாதம் உத்தரவிட்டனர். இதனிடையே இந்த வழக்கின் தீர்ப்பு (திங்கட்கிழமை) அதாவது நேற்று வழங்கப்படும் என்று சென்னை உயர் நீதிமன்றம் அறிவித்தது. ஆனால் மிக்ஜம் புயல் காரணமாக சென்னை சென்னை உயர் நீதிமன்றுக்கு நேற்று விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இன்று இந்த வழக்கின் தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதன்படி, அ.தி.மு.கவில் இருந்து சசிகலாவை நீக்கியது செல்லும் என்று தீர்ப்பு வழங்கி உரிமையியல் நீதிமன்ற உத்தரவை எதிர்த்த சசிகலாவின் மனுவை தள்ளுபடி செய்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# உக்ரைன் முன்னாள் அதிபர் பெட்ரோ வெளிநாடு பயணிக்க அனுமதி மறுப்பு

உக்ரைன்-ரஷ்யா போர் நடைபெற்று வரும் நிலையில், உக்ரைன் முன்னாள் அதிபர் பெட்ரோ போரோஷென்கோ (வயது 58) வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ள முடிவு செய்தார்.

இந்த சுற்றுப்பயணத்தின்போது அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் மைக் ஜான்சனை சந்திக்கவும், போலந்து நாடாளுமன்றத்திற்கு செல்லவும் திட்டமிட்டிருந்தார். அதன்பின்னர் ஹங்கேரி பிரதமர் விக்டர் ஆர்பனை சந்திக்க முடிவு செய்திருந்தார் எனவும் தகவல் வெளியானது.

ரஷ்ய அதிபர் புடினை ஹங்கேரி பிரதமர் ஆர்பன் பாராட்டியமையொடு, ஐரோப்பிய ஒன்றியத்தில் சேருவதற்கான உக்ரைன் அரசின் முயற்சியை



ஆதரிக்க மறுத்தவர். இதனால் உக்ரைன் அரசு அவர் மீது அதிருப்தியில் உள்ளது. இந்நிலையில், உக்ரைனில் இருந்து நேற்று புறப்பட்டார் பெட்ரோ போரோ ஷென்கோ. ஆனால் அவர் எல்லையில் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டார்.

ஹங்கேரி பிரதமரைச் சந்திக்க திட்டமிட்டமையச்ல் முன்னாள் அதிபர் பெட்ரோ போரோஷென்கோ நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாக பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற அனுமதி இருந்தும் தன்னைத் திருப்பி அனுப்பினர் எனவும், எல்லையில் தனக்கு நேர்ந்தது, ஒற்றுமை மீதான தாக்குதல் என்றும் போரோஷென்கோ கூறினார். ஆனால், ஹங்கேரி பிரதமர் ஆர்பனை சந்திக்க திட்டமிட்டார் எனக்கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து அவர் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

உக்ரைன் ராணுவ சட்டத்தின்படி, 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்ட ஆண்கள் சிறப்பு அனுமதி பெறாவிட்டால் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுமாத்ராவில் திடீரென வெடித்த எரிமலை 11 பேர் உயிரிழப்பு; 12 பேரைக் காணோம்

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் உள்ள மவுண்ட் மராபி என்ற எரிமலை நேற்று திடீரென வெடித்துச் சிதறியது. நாலாபுறமும் நெருப்புக் குழம்புகள் சிதறின. விண்ணை முட்டும் அளவுக்கு சாம்பல் படர்ந்தது.

இதனால் அங்கு மலையேற்றத்தில் ஈடுபட்டிருந்த வீரர்கள், அவசரம் அவசரமாக திரும்பினர். மொத்தம் 75 மலையேற்ற வீரர்கள் அங்கு சென்றிருக்கலாம் என கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களில் 46 பேர் கீழே இறங்கிவிட்டனர். அவர்களில் சிலருக்கு காயங்கள் ஏற்பட்டிருப்பதால், மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

மற்றவர்களை மீட்கும் முயற்சியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் 11 பேர் சடலமாக கண்டறியப்பட்டனர். 3 பேர் மட்டுமே உயிருடன்



கண்டுபிடிக்கப்பட்டனர். மீதமுள்ள 12 பேரை மீட்புக்குழுவினர் தேடி வருகின்றனர்.

பசிபிக் நெருப்பு வளைய பகுதியில் அமைந்துள்ள தீவு நாடான இந்தோனேசியாவில் சிறியதும் பெரியதுமான சுமார் 130 எரிமலைகள் உயிர்ப்புடன் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# தாய்லாந்தில் கோர பஸ் விபத்து; 14 பயணிகள் உடல் நசுங்கி பலி!

தாய்லாந்தின் பிரச்சாப் கிரி கான் மாகாணத்தில் நேற்று நள்ளிரவில் பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து தறிகெட்டு ஓடியது. பின்னர் சாலையோரத்தில் உள்ள மரத்தின் மீது பயங்கரமாக மோதியது. இதில் பஸ்ஸின் முன்பகுதி இரண்டாகப் பிளந்தது.

தகவல் அறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பஸ்ஸின் இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்டனர். இந்த கோர விபத்தில் 14 பேர் உடல் நசுங்கி பலியாகினர். 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். காயமடைந்த அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அரசு போக்குவரத்து நிறுவனம் தெரிவித்துள்ளது.

